பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 24 | சனிக்கிழமை | 09.08.2025 | அதிர்வு 08

## பொலிஸார் துப்பாக்கிச்சூடு! சந்தேகநபர் ஒருவர் மரணம்!!



கொழும்பு, கடுவெல, 06

### - நாமலின் தலைமையில் -

# 2029 இல் 'மொட்டு' ஆட்சி!



## இப்படி நம்புகின்றார் சஞ்சீவ



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் வெகுவிரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள். கட்சியின் பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும். 2029 ஆம் ஆண்டு நாமல் ராஜபக்‌ஷவின் தலைமையில் நாங்களே ஆட்சியைக் கைப்பற்றுவோம்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார். 06

# உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம்!

## குச்சவெளியில் நேற்று மீட்பு



(எஸ்.கீதபொன்கலன்)

உருக்குலைந்த நிலையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை பகல் திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பொலிஸ் பிரிவின் திரியாயில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு 06



# காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்)

மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆண் ஒருவரின் 06



"இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும், மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்ற கனவை எதிர்க்கட்சிகள் மறந்து விட வேண்டும். இது எமது ஆட்சி. இடைக்கால ஜனாதிபதி ஒருவர் வரவே மாட்டார். எனவே, மாற்று வழியில் அரசியல் செய்யுங்கள் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

உண்மைதான். இன்றைய நிலையில் அத்தகைய நெருக்கடி ஏற்படும் சாத்தியம் இல்லை என்பதை ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும்.

ஆனால், அதற்காக மீண்டும் ரணில் விக்கிரமசிங்க போல இடைக்கால சுமையைத் தாங்குவதற்கு ஓர் இடைக்கால ஜனாதிபதி வரவேண்டிய தேவை இல்லை என்று இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியாகக் கூறுவதுதான் சற்று அதிகப்பிரசங்கித் 06





# பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இலங்கைக்கு ஆஸி. உதவி வழங்க வேண்டும்

## அந்நாட்டு ஆளுநர் நாயகத்திடம் சஜித் கோரிக்கை

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான ஆதரவை – உதவியை ஆஸ்திரேலியாவிடம் இருந்து பெற்றுத் தருமாறு அந்நாட்டு ஆளுநர் நாயகத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டினுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இதன்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கோரிக்கையை விடுத்தார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரில் அங்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வின்போதே மேற்படி இருவரும் இவ்வாறு சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலே நிலவி வரும் நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி இங்கு சுமுகமான உரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஈடுபட்டார்.

இலங்கை ஏற்றுமதி சார்ந்த பொருள்களுக்கு ஆஸ்திரேலியாவில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது கோரிக்கை விடுத்தார்.







# இராணுவ முகாமிற்கு வருமாறு அழைத்துவிட்டுத் தாக்குதல் நால்வர் தப்பிப் பிழைத்து மீண்டனர்; ஒருவரைக் காணோம்!

## முத்தையன்கட்டுக்குளம் இடதுகரையில் வியாழன் இரவு சம்பவம்

(பா.சதீசன்)

முத்தையன்கட்டுக்குளம் இடதுகரை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் “இராணுவ முகாமிற்கு வாருங்கள், தகரங்கள் கழற்ற வேண்டும்!“ என அழைப்பு எடுத்து வரவழைக்கப்பட்ட ஐவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மாயமாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முத்தையன்கட்டுக்குளம் இடதுகரை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் இராணுவ முகாமிற்கு வாருங்கள், தகரங்கள் கழற்ற வேண்டும் என அந்தப் பகுதி இளைஞர் ஒருவருக்கு ஒரு தொலைபேசி இலக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் அழைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதனையடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இராணுவ முகாம் ஒரு சில நாள்களில் விடுவிக்கப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில் அந்த இராணுவ முகாமிலுள்ள கட்டமைப்புகளை அகற்றும் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் தகரங்கள் தருவதாக கூறி அப்பகுதியில் இளம் குடும்பஸ்தருக்கு இராணுவத்தினர் ஒருவரால் தொலைபேசியில் தகவல் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதனையடுத்து நேற்று முன்தினம் இரவு ஐவர் சென்றுள்ளனர். இராணுவ முகாமிற்கு சென்ற இளைஞர்களுக்கு தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் துரத்தித் துரத்தித் தாக்கினர் என்றும் கூறப்பட்டது. இராணுவ முகாமிற்கு பின்பகுதியில் உள்ள குளம் வரை இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

அதனால் என்ன செய்வதென்று தெரியாது இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக ஓடித் தப்பி வந்ததார்கள் எனவும், இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தன்சக்களைத் தாக்கினர் எனவுன் தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இராணுவ முகாமிற்குச் சென்ற ஐந்து நபர்களில் நால்வர் திரும்பி வந்துள்ள நிலையில் ஒருவர் மாயமாகியுள்ளார்.

இதனையடுத்து நேற்றையதினம் இராணுவ முகாமிற்கு வந்த இராணுவ வாகனம் வீதியில் பொதுமக்களால் வழிமறிக்கப்பட்டு நியாயம் கிடைக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

மாயமாகிய இளைஞர் தப்பி ஒடும் போது இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக உள்ள முத்தையன்கட்டுக் குளத்தின் பின்பகுதியில் வீழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதி கிராம மக்கள் நீரில் இறங்கி வலை விட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டும் நேற்றிரவு வரை பலன் கிடைக்கவில்லை.

இந்நிலையில் மேற்படி காணாமல் போன இளைஞனின் சகோதரரால் இந்தச் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சகோதரர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் முத்தையன்கட்டில் வசிக்கும் எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற 32 வயதுடையவரே காணாமல் போயுள்ளளார். இவர் ஏழு மாதக் குழந்தையின் தந்தையாவார்.











# யாழ்ப்பாணம் புல்லுக்குளத்தில் நேற்று மாலை ஆணின் சடலம்

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள புல்லுகுளத்தில் ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று மாலை இனங்காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்திற்கு அருகில் உள்ள குளத்தில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் பற்றியோ உயிரிழப்புக்கான காரணமோ தெரியவராத நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# உகந்தை முருகன் ஆலயக் கடலில் நேற்று மாலை குளிக்கச் சென்ற இளைஞரை தேடும் பணி தீவிரம்

**(வடிவேல் டினேஸ்)**

உகந்தை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவ நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

இதற்காக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இன்று ஆலயத்தில் திரள்வார்கள என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே உகந்தை முருகன் ஆலய கடற்பரப்பில் நேற்ற்ய் மாலை ஐந்து மணியளவில் குளிப்பதற்கு சென்ற மூவரில் இருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் தம்பிலுவிலைச் சேர்ந்த ஒரு நபரைத் தேடும் பணியில் பொதுமக்களும் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.




Muhurtham Jewels
PRESENTS
POWERED BY
PHYSIO KING
SV MEDIA
IN SUPPORT
தமிழ்ச் சமூக மையம்
Tamil Community Centre
TAPASS
PRADEEP KUMAR
BHARATH SANKAR
JHANU
NAVEEN MADHAV
AJEESH
VIGNESH PRABHU
YADHAVI GANEES
MAGIZHAN
MEGA BLAST
2025 CELEBRATING SOUTH ASIAN TASTE & CULTURE
FREE PARKING & ENTRY
9 & 10 AUGUST, 2025
SATURDAY 11AM-11PM
SUNDAY 11AM-9PM
SHEPPARD AVENUE EAST, DEAN PARK ROAD TO MEADOWVALE
GT Brokers
AERO COURIER
INK DRIP
GUNAAMS SUPERMARKET
THAADI COMPLEX
K T GROUP
THE DESIGN WOLF.COM

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனம் போல தோற்றுகின்றது.

சரியோ, பிழையோ நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் துவண்டு, நிமிர இயலாமல் – மீண்டெழ முடியாமல் – தடுமாறிய போது, அந்தப் பாதையை செப்பனிட்டுக் கொடுத்தது ரணிலுடைய அரசியல்தான். அறிவுதான். சாணக்கியம்தான். ராஜதந்திரம்தான்.

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால், ரணிலின் பொருளாதார அணுகுமுறைக் கொள்கைகளை எல்லாம் தூக்கிக் கடாசுவோம் என்று பிரகடனப்படுத்திய தேசிய மக்கள் சக்தியினரும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இப்போது அதே ரணில் விக்கிரமசிங்க போட்ட தடத்தில் அட்சரம் பிசகாமல், தொடர்ந்து பின்பற்றி நடந்து வருகின்றனர் என்பது வெளிப்படையானது.

இன்றைய நிலையில் ரணில் போட்ட தடத்தில் பயணிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான விடயம் அல்ல. அதனால் உடனடி நெருக்கடியும் வராது. இடைக்கால ஜனாதிபதியும் வரவேண்டிய தேவையும் எழாது.

ஆனால் நிலைமை இப்படியே நீடிக்கும் என்பதல்ல. இந்த நெருக்கடியற்ற வாழ்வு நீடிப்பதற்கு பல தடைகள் உள்ளன.

2022 இல் வெளிநாட்டுக் கடன்களை இறுக்க முடியாமல் வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட இலங்கை இன்னும் அந்த வங்குரோத்து நிலையிலிருந்து மீளவில்லை. ரணிலின் அரசு, சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் உலக நாடுகளோடும் சர்வதேச கடன் வழங்கும் பிற தரப்புக்களுடனும் பேச்சு நடத்தி, தாஜா பண்ணி, கடன் தொகை மீளளிப்புத் தவணையை 2028 வரை ஒத்திவைத்திருக்கிறது.

அந்த வசதியில்தான் அநுராவின் அரசு இப்போது நாட்டின் பொருளாதாரத்தைச் சமாளித்துக் கொண்டு செல்கின்றது.

அதாவது காலாகாலமாக வெளிநாடுகள் மற்றும் வெளித்தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனுக்கான தவணைப் பணத்தை செலுத்தத் தேவையில்லை என்ற சலுகைக் காலத்தில் பொருளாதார சில்லு தடையின்றி ஓடிக்கொண்டிருக்கின்றது. அதை ஏற்படுத்தித் தந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அந்தக் காலக்கெடு 2028 வரைத் தான்.

2028 இலிருந்து வெளிநாட்டுக் கடன்களை நாடு அதற்குரிய தவணைப்படி மீளளிக்க வேண்டும். அப்படி மீளளிப்பதாயின், அதற்குரிய பொருளாதார ஸ்திர நிலையை நாடு அடைந்திருக்க வேண்டும்.

கிடைத்த இந்த ஆறு ஆண்டு கால அவகாசத்தில் நாட்டின் உற்பத்திப் பொருளாதாரமும், ஏற்றுமதிப் பொருளாதாரமும் மேம்பாடு அடைந்திருக்க வேண்டும். ஆனால் அந்த ஆறு ஆண்டுகளில் இரண்டரை ஆண்டுகள் தாண்டியும் நாடு அந்தப் பொருளாதார மேம்பாட்டை நோக்கி நகரவில்லை.

வெளிநாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவைச் செலுத்தத் தேவையில்லை என்று ரணில் விக்கிரமசிங்க பெற்றுக் கொடுத்த கால அவகாசத்தில், நெருக்கடியின்றி ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அந்தக் கணிப்பில் இலங்கையின் பொருளாதாரம் மீளப் பாதிக்கப்படாது, மீண்டும் நெருக்கடி வராது என்றெல்லாம் முழங்குகின்றார். ஆனால் அது 2028 வரைதான்.

அநுரகுமார திஸாநாயக்கவின் மூன்றரை ஆண்டுகால ஆட்சி முடியும் போது நாடு மீண்டும் வெளிநாட்டுக் கடன் தவணைப் பணக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டி இருக்கும். அப்போது பொருளாதாரத்தை உறுதியாகக் கொண்டு நடத்துவதற்கான தயாரிப்பு – உஷார் – நிலையை இப்போது அநுரகுமார திஸாநாயக்க அரசு முன்னெடுத்திருப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் உற்பத்தித் திறனும், ஏற்றுமதித் திறனும் பெரிதாக வளர்ந்ததாகத் தெரியவில்லை.

வெளிநாட்டுக் கடன் தவணைப் பணத்தை இப்போதைக்கு மீளச் செலுத்தத் தேவையில்லை என்ற 'ப்ரீ வீலில்' நாட்டின் பொருளாதாரம் என்ற சைக்கிள் தங்கு தடையின்றி ஓடிக் கொண்டிருக்கின்றது.

2028 இல் வெளிநாட்டுக் கடன் தவணைப் பணம் என்ற சுமை ஏறும்போது, அநுரகுமார திஸாநாயக்க என்ன செய்வார் என்பதுதான் கேள்வி. அப்போது மீண்டும் முதுகு கொடுக்க ரணிலை அழைக்க வேண்டிய தேவை நாட்டிற்கு வந்தாலும் வரலாம்.

ஆகவே, இறக்கத்தில் பொருளாதார சைக்கிளை இலகுவாக ஓட்டிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 2028 இல், மலை மீது சைக்கிளை ஓட்டிச் செல்வதற்கு – ஏற்றிச் செல்வதற்கு – ரணிலின் உதவியை நாட வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## பொலிஸார் துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொத்தலாவல – கெக்கிலிவெல சாலைப் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தார்.

பொலிஸ் தகவலின்படி, சந்தேகநபரைக் கைது செய்ய முயன்றபோது அவர் வாளால் பொலிஸாரைத் தாக்க முயன்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து, தற்காப்புக்காகப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர் முல்லேரியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்தார் என்று வைத்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## 2029 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைவரம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தின் போது பல்வேறு காரணிகளால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியில் மீண்டும் ஒன்றிணைவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கட்சியில் இருந்து விலகிச் சென்ற முன்னிலை சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் நடைபெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் வெகு விரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள். கட்சியின் பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த அரசு செயற்படுகின்றது. 2029 ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும். அதற்கான நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டுள்ளோம்." – என்றார்.

## உருக்குலைந்த நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்ட திருகோணமலை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக மூதூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பான விசாரணைகளைக் குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

திரியாயை அண்மித்த கல்லறாவ கடற்கரைப் பகுதியில் வாடி அமைத்து மீன்பிடியில் ஈடுபடும் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் வெளியே சென்று இது வரை வாடிக்கு திரும்பவில்லை. அவர் வைத்தியசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். ஆனால், எந்த வைத்தியசாலையிலும் அவர் அனுமதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை என்று அவரது உறவினர்கள் கூறுகின்றனர். எனினும், காணமல்போனவர்தான் இங்கு சடலமாகக் காணப்படுகின்றாரா என இதுவரை தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடலம், கடற்படை சுழியோடிகளால் மீட்கப்பட்டது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்லோ பகுதியைச் சேர்ந்த வேலு மருதமுத்து (வயது 55) கடந்த புதன் கிழமை காலை முதல் காணாமல் போயிருந்தார்.

இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் தேடுதல் வேட்டை ஆரம்பமானது.

இந்நிலையிலேயே நேற்று அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.






# கொக்குத்தொடுவாய் களப்புக்கு தொழிலுக்குச் சென்ற இளைஞன் நேற்று விடிகாலையில் வெட்டிக்கொலை!

## மோப்பநாய் சகிதம் பொலிஸார் புலனாய்வு நடவடிக்கை

(பா.சதீசன்)

கொக்குத்தொடுவாய் களப்பு கடலிற்கு தொழிலுக்கு சென்ற இளைஞன் இனந் தெரியாதோரால் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்திற்கு 300 மீற்றர் முன்பாக

கொக்குத்தொடுவாய் களப்பு கடலில் நேற்று முன்தினம் இரவு தொழிலுக்கு சென்ற இளைஞன் நேற்று அதிகாலை தொழில் முடித்து மோட்டார் சைக்கிளில் திரும்பிய போது பின்பக்கமாகத் துரத்தி வந்து, கொக்குத்தொடுவாய் களப்பு கடலில் இருந்து 50மீற்றர் தூரத்தில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்யப் பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 2.30 மணி யளவில் வேறு நபர் ஒருவர் தொழி லுக்கு வரும்போது இந்த இளைஞன் வீதியில் வீழ்ந்து கிடப்பதை கிடப்பதைக் கண்டிருந்தார். அப்பகுதியில் யானை நடமாட்டம் அதிகமாகையால் யானை அடித்து விட்டதோ எனக் கருதி அந்த இளைஞனின் தந்தையையும், கிராம அபிவிருத்தி சங்க தலைவரையும் விரைந்து அவ்விடத்திற்கு கூட்டிக் கொண்டு வந்து பார்த்த போதே இளை ஞனின் உடலில் வெட்டுக் காயங் கள் இருந்துள்ளமை தெரியவந்ததுள் ளது.

பின்னர் கொக்குளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து தீவிர விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டுள்ள னர்.

அத்தோடு சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தை பார்வை யிட்டு மோப்பநாய் சகிதம் சோதனையை மேற்கொள்ளுமாறும், கைவிரல் அடை யாள சோதனையையும் முன்னெடுக்கு மாறும் , உடலத்தை உடற்கூற்று பரிசோத னையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கவும் பொலிஸாருக்கு உத் தரவிட்டுள்ளார்.

மோப்ப நாய் சகிதம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். அத்தோடு விசாரணைக்காக அந்த இளைஞனின் மைத்துனரை பொலிஸ ார் விசாரணைக்காக பொலிஸ் நிலை யத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அந்த இளைஞன் யாரால் கொலை செய்யப்பட்டார், என்ன காரணத்திற் காகக் கொலை செய்யப்பட்டார் என்ற பல்வேறு கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவத்தில் கொக்குத் தொடுவாய் வடக்கைச் சேர்ந்த ஜெயராஜ் சுபராஜ் என்ற 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவராவார். இந்த இளைஞன் சிறந்த மரதனோட்ட வீரனாவார். வட மாகாணத்தில் பல சாதனைகளை கடந்த காலங்களில் பெற்றிருக்கின்றார் என் பதும் குறிப்பிடதக்கது.









# 11,000 மெட்ரிக் தொன் நெல் இதுவரையில் கொள்வனவு

இம்முறை சிறுபோகத்தில் இதுவரை 11,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அதிகளவிலான நெல் அம்பாறை மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள்ளார்.

நாடு நெல் ஒரு கிலோ 120 ரூபாவுக்கும் சம்பா நெல் ஒரு கிலோ 125 ரூபாவுக்கும் கீரி சம்பா நெல் ஒரு கிலோ 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலேயே நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.





# 10 கிலோ குஷ் போதைப்பொருளுடன் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது

10 கிலோ 260 கிராமுக்கும் அதிகளவான குஷ் போதைப்பொருளுடன் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொதட்டுவ, மானிகமுல்ல மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கடுவெல நுழைவாயிலுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி இருவரில் ஒருவரிடமிருந்து 5 கிலோ 154 கிராம் குஷ் போதைப்பொருளுடன், போதைப்பொருள் கடத்தலின் ஊடாக ஈட்டப்பட்ட ஒரு லட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மற்றைய சந்தேகநபரிடமிருந்து 5 கிலோ 106 கிராம் அளவிலான குஷ் போதைப்பொருள் மற்றும் 150,000 ரூபா பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 64 வயதுடைய கொதட்டுவ மற்றும் கொழும்பு 14 ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

# போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் ஏழு மாதங்களில் 122,913 பேர் கைது

கடந்த ஏழு மாதங்களில் மாத்திரம், போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 122,913 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் 928 கிலோ கிராம் ஹெரோயின், 1,396 கிலோ கிராம் க்ரிஸ்டல், 11,192 கிலோ கிராம் கஞ்சா, 28 கிலோ கிராம் கொக்கையின் மற்றும் 381 கிலோ கிராம் ஹஷிஷ் ஆகிய போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

இதேவேளை, நாட்டில் போதைப்பொருள்களின் பாவனை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

வெளிநாடுகளில் இருந்தும் நாட்டுக்குள் பல்வேறு வகையான போதைப்பொருட்கள் கடத்தப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வைத்திய நிபுணர்களின் சேவை

முன்னெபோதும் இல்லாத மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்த இலங்கைக்கு அதன் மூளை வளம் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வது தொடர்ந்து பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது.

நாட்டின் கற்றறிந்தோர், புத்திஜீவிகள், நிபுணர்கள் இங்குள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தங்களுக்கு நல்வாழ்வு தேடி வெளிநாடுகளை நோக்கி நகர்ந்து வருகின்றனர். தங்களின் தகுதி மற்றும் திறமைக்கு ஏற்ற வேதனம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இந்த நாட்டில் கிடைக்காது எனக் கருதும் அவர்கள், சுபீட்சமான - வசதியான - சௌகரியமான - வாழ்வைத் தேடி வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள். இதனால் நாட்டின் புத்திஜீவிகள் வளம் குன்றி வருகின்றது.

இந்தக் காரணத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது மருத்துவ - சுகாதாரத் துறையாகும். குறிப்பாக விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் வெளிநாடுகளில் தம் திறமைக்கேற்ப அதிகம் உழைக்கலாம், வசதியான வாழ்வு வாழலாம் என்று தமது நாட்டைக் கைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் நிஷாந்த சமரவீர எழுப்பிய கேள்விகளுக்கு சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ புள்ளிவிவரங்களுடன் பதிலளித்திருக்கிறார்.

134 மருத்துவமனைகளில் தற்போது 1,139 விசேட மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று அமைச்சர் ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

விசேட மருத்துவ நிபுணர்கள், தற்போது 2,042 பேர் அரச மருத்துவமனைகளில் சேவையில் உள்ளனர் என்று அவர் கூறினார்.

விசேட மருத்துவ நிபுணர்களில் பெரும்பாலோர் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் சென்று திரும்பி வரத் தவறிவிட்டனர் என்றார் அமைச்சர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு சேவையை கைவிட்டமைக்காக் 82 சிறப்பு மருத்துவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் ஏழு விசேட மருத்துவ நிபுணர்கள் அதிகாரபூர்வமாக ராஜினாமாச் செய்தனர். 57 சிறப்பு மருத்துவர்கள் முறையாக மற்ற துறைகளில் பணிபுரிய விடுவிக்கப்பட்டனர். 191 மருத்துவர்கள் சம்பளமில்லா விடுப்பு பெற்றுள்ளனர். 233 நிபுணர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் நிபுணர்களின் திரும்பும் விகிதத்தில் சமீபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார. முன்பு சுமார் 40 வீதமானோர் மட்டுமே திரும்பி வந்த நிலையில், இந்த எண்ணிக்கை இப்போது 65 வீதமாக அதிகரித்துள்ளது என்று கூறினார் அமைச்சர்.

சிறப்பு மருத்துவர்களின் பணிக் குழுவை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன எனவும், நிபுணர்களை உருவாக்குவது அவசரமாக செய்யக்கூடிய ஒரு செயல்முறை அல்ல என்றும் அமைச்சர் ஜெயதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டார்.

அவர் கூறுகின்றமை உண்மைதான். விசேட வைத்திய நிபுணர்களை திடுதிப்பென உருவாக்கி விட முடியாது. ஆனால் இருக்கும் விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் பார்த்துக் கொள்வதையும், வெளியேறியவர்களை மீண்டும் நாட்டுக்கு - சேவைக்கு - திரும்பச் செய்வதையும் செய்ய முடியும் அல்லவா? அதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுவது அத்தியாவசியமானதாகும்.



# இலங்கையிலுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரி பாம்பன் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் விசைப்படகு மீனவர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாம்பன் தெற்கு மீன்பிடித் துறை முகத்தில் இருந்து சீனி என்பவரின் விசைப்படகில் கடலுக்கு சென்ற 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் புதன் கிழமை காலையில் சிறைப்பிடித்தனர். 10 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஒகஸ்ட் 10 வரை நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களை சிறைப்பிடித்ததைக் கண்டித்தும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுத்து வர வலியுறுத்தியும் பாம்பன் விசைப்படகு மீனவர்கள் நேற்று இரண்டாவது நாளாக அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பாம்பனில் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி இறங்குதளத்தில் 100 இறகும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிடப்பட்டிருந்தன. மேலும் 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கும் செல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# விவசாயிகளின் நலனை பாதுகாப்பதற்கு ஒட்டுமொத்த தேசமும் துணை நிற்கிறது

## பிரதமர் மோடி உறுதி



"விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போர் நலனில் இந்தியா சமரசம் செய்து கொள்ளாது. அவர்களது நலனை ஒருபோதும் விட்டுத்தராது. அதற்காக எந்த விலையும் கொடுக்க தயாராக இருக்கிறோம்"

இவ்வாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான புதிய வரிவிகிதங்களை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். வரி விகிதத்தை குறைப்பது தொடர்பாக இந்தியா – அமெரிக்கா இடையே கடந்த 6 மாதங்களாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

அமெரிக்காவில் இருந்து பால், பாலாடை கட்டி, நெய் ஆகியவற்றை இந்தியாவில் இறக்குமதி செய்ய அந்த நாடு விரும்புகிறது. இது இந்திய விவசாயிகளின் நலனுக்கு எதிரானது என்பதால் அமெரிக்க பால் பொருள்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்க மத்திய அரசு மறுத்துவிட்டது.

இதேபோல, அமெரிக்காவில் இருந்து கோதுமை, சோயாபீன், சோளம், ஆப்பிள், திராட்சை, கொட்டை வகைகளை இந்தியாவில் விற்பனை செய்யவும் அந்த நாடு அனுமதி கோரி வருகிறது. அதோடு மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு தானியங்களையும் இந்தியாவில் விற்பனை செய்ய அமெரிக்கா விரும்புகிறது. அதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை.

மேலும், 'ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது. அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே இறக்குமதி செய்யவேண்டும்' என்றும் ட்ரம்ப் நிர்ப்பந்தம் செய்து வருகிறார். ஆனால்,அமெரிக்காவின் அழுத்தத்தையும் மீறி, ரஷ்யாவிடம் இருந்து கச்சாஎண்ணெய்யை இந்தியா தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது.

இந்த சூழலில், இந்திய பொருள்களுக்கான வரியை 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரித்து ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்நிலையில், தமிழக வேளாண்விஞ்ஞானி மறைந்த எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி உரையாற்றுகையில், "சர்வதேச அளவில் பால், பருப்பு வகைகள், சணல் உற்பத்தியில் இந்தியா முதல் இடத்திலும், அரிசி,கோதுமை, பருத்தி, பழங்கள், காய்கறிகள், மீன் உற்பத்தியில் 2ஆவது இடத்திலும் உள்ளது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடியிலும் புதிய சாதனைகளை படைத்து வருகிறோம். விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துவருகிறது. விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போரின் நலன்களில் மத்திய அரசு சமரசம் செய்துகொள்ளாது. அவர்களது நலனை ஒருபோதும் விட்டுத் தராது. இதற்காக எந்த விலையும் கொடுக்க தயாராக இருக்கிறோம்.

அவர்களது நலன்களை காக்க ஒட்டுமொத்த தேசமும் துணை நிற்கிறது. விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் அவர்களது விவசாய செலவினங்களை குறைக்கவும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். நாடு முழுவதும் 10,000 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்களது விளைபொருள்களை எளிதாக விற்பனை செய்ய மின்னணு தேசிய வேளாண் சந்தை வெற்றிகரமாக செயல்படுகிறது. நாடு முழுவதும் உணவு பதப்படுத்தும் மையங்கள், சேமிப்பு கிடங்குகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள 100 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது." என்று தெரிவித்தார்.



# இந்தியாவுடன் வர்த்தகம் தொடர்பான எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை இந்தியாவுடன் வர்த்தகம் தொடர்பான எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை 30 அன்று, டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருள்களுக்கு 25 சதவீத வரியை அறிவித்தார்.

மேலும் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் ஆயுதங்கள் வாங்கினால் கூடுதல் வரி விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

அதன்படி கடந்த இரு தினங்களுக்கு முன்பு, இந்தியா மீது மேலும் 25 சதவீதம் கூடுதல் வரிகளை விதிக்கும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

இதன்மூலம், அமெரிக்கச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கான மொத்த வரி விதிப்பு 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப்பிடம், 50 சதவீத வரிவிதிப்புக்குப் பிறகு இந்தியாவுடனான வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமா என்று கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் முடிவால் பேரழிவு ஏற்படும்


## ஐ.நா, கண்டனம்

இஸ்ரேல் முடிவுகள் பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு காசாவிலிருந்து வெளியேறிய இஸ்ரேல் மீண்டும் காசாவை கைப்பற்றத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

இஸ்ரேலின் இந்த முடிவு பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.










# உலக ரோபோ மாநாடு சீனாவில் ஆரம்பமானது

உலக ரோபோ மாநாடு சீனாவின் பெய்ஜிங் நகரில் நேற்று ஆரம்பமானது.

200 இற்கு மேற்பட்ட நிறுவனங்களின் 1500 இற்கும் மேற்பட்ட தயாரிப்புக்கள் இந்த மாநாட்டில் காட்சிப்படுத்தப்படும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 20 மனித உருவ ரோபோ உற்பத்தி நிறுவனங்கள் இவ்வாண்டின் ரோபோ மாநாட்டில் கலந்துகொண்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.













# க. பொ. த உயர்தரப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி நீடிப்பு

2025 ஆம் ஆண்டுக்கான க. பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி எதிர்வரும் 12 ஆம் திகதி நள்ளிரவு வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மீளாய்வுப் பெறுபேறுகளுக்கமைய 2025 ஆம் ஆண்டு, க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க எதிர்பார்ப்பவர்களும், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால எல்லைக்குள் விண்ணப்பிக்க முடியாமல் போன விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை நிகழ்நிலையில் சமர்ப்பிக்க முடியுமென இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.




மேலும் எக்காரணம் கொண்டும் இறுதித்திகதி மேலும் நீடிக்கப்பட மாட்டாதெனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# யாழில் நாட்டாரியற் கலை போட்டிகளை நடத்த ஏற்பாடு

குரலோசை நுண்கலைகளின் தாயகம் எனும் கலைமன்றத்தின் 10 ஆவது ஆண்டுக் கலைவிழாவை முன்னிட்டு நாட்டாரியற் கலைப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளன.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், தென்மோடிக் கூத்து, இசைநாடகம் போன்ற துறைகளில் நடாத்தப்படவிருக்கும் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்குப் பெறுமதியான பரிசுத் தொகையும் வழங்கப்பட உள்ளது.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் ஆகியவை மூன்று பிரிவாகவும் ஏனைய போட்டிகள் வயதுக்கட்டுப்பாடு அற்றதாகவும் நடாத்தப்படும். வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கப் போட்டிகளில் முதலாம் இடத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்திற்கு இருபதாயிரம் ரூபாவும் மூன்றாம் இடத்திற்கு பதினையாயிரம் ரூபாவும் ஏனைய போட்டிகளுக்கு முதலாம் இடத்திற்கு ஐம்பதாயிரமும் இரண்டாம் இடத்திற்கு நாற்பதாயிரமும் மூன்றாம் இடத்திற்கு முப்பதாயிரமும் வழங்கப்பட உள்ளன.

போட்டிகளுக்கான விதிமுறைகளை 0776150248 எனும் கைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று குரலோசையின் இயக்குநர் தவநாதன் றொபேட் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தூர் சந்தியில் விபத்து; இளைஞர் ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், புத்தூர் சந்திக்கு அருகாமையில் இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்த பரிஸ்ணன் அஜய் (வயது 20) என்ற இளைஞராவார்.

மேற்படி இளைஞரும் நண்பரும் மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டியை பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது, புத்தூர் சந்தியில் இருந்து பருத்தித்துறை வீதி பக்கமாக உள்ள வளைவில் எதிர்ப்பக்கம் இருந்த மின் கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த இருவரையும் அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய நபர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை அச்சுவேலிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# தொழில்கல்விக்கு வழிநடத்துவதே கல்விச் சீர்திருத்தங்களின் நோக்கம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

பிள்ளைகளிடம் விழுமியங்களை வளர்ப்பதும், பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய பிள்ளைகளை தொழிற் கல்விக்கு வழிநடத்துவதும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதுமே கல்வி சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும் என்று பிரதம ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடலொன்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஆயர்களுடன் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதமரும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவும் கல்வி சீர்திருத்தங்கள் குறித்த முழுமையான விளக்கத்தை முன்வைத்தனர்.

எல்லா பிள்ளைகளுக்கும் உயர்தரமாகக் கருதப்படும் வேலைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதுடன், கடற்றொழில், மின் பொறியியல் துறை மற்றும் வாகன பழுதுபார்ப்பு போன்ற தொழிற்கல்வித் துறைகளின் பெறுமதியை விளக்கி, அத்துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதற்கான அடித்தளத்தை பாடசாலைக்குள்ளேயே எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் பாடத்துறை நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவம், அந்த தேர்வு செயல்முறையை முறைப்படுத்துதல் மற்றும் பிள்ளைகளுக்கு சிறந்த தரமான கல்வியை வழங்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் மேன்மைதங்கிய ஆயர் ஹரோல்ட் அந்தோணி உள்ளிட்ட ஆயர்கள் கலந்து கொண்டனர்.











# வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் ஜனாதிபதியின் செயலாளர் பங்கேற்பு

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா தேர்பவனியை முன்னிட்டு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்திற்கு முன்பாக வீதி வலம் வந்த தேர்பவனிக்கு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மலர் வைத்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.









# இன்றைய ராசி பலன்கள் - 09.08.2025




இன்று மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக்கொள்வது முக்கியம். கவலைப்படுவதையும் உணர்ச்சி வசப்படுதலையும் இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று வேலைப் பளு அதிகமாகக் காணப்படும். பணிகளில் திட்டமிடல் அவசியம். உண்மையான உழைப்பு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பதன் மூலம் உறவில் பாதிப்புகளை தவிர்க்கலாம். நட்பு முறையுடன் பழகினால் நல்ல புரிந்துணரவு வளரும்.

பணவரவு அதிகமாக காணப்படும். இன்று தேவையில்லாத செலவினங்களும் ஏற்படலாம். எனவே உங்களால் செலவை கட்டுப்படுத்த இயலாது.

உங்கள் துணையாரின் உடல் நிலை பற்றிய கவலைகள் ஏற்படலாம். மூக்கு வாய் தொண்டை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




மன அழுத்தத்தை விரட்ட உற்சாகத்தை கடைப் பிடிக்க வேண்டிய நாள். இன்று கவனக்குறைவு ஏற்படலாம். எதையும் எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியிட அழுத்தம் காரணமாக பணியில் தொய்வு ஏற்படலாம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலம் திறமையாக பணிகளை கையாளலாம்.

நட்புடன் பழகுவதன் மூலம் துணையாருடன் நல்லுறவு மேம்படும். அவரின் விருப்பப்படி செயல்படுவதன் மூலம் சந்தோஷம் கிட்டும்.

இன்று பணவரவு திருப்திகரமாக இல்லை. கூடுதல் செலவினங்கள் கவலையை ஏற்படுத்தும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளுமையான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். நீங்கள் செய்யும் செயலை சரியாக முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும்.

இன்று வேலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உங்களின் தனிப்பட்ட திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை பேச்சால் உங்கள் துணையாரை கவர்வீர்கள். ஆதனால் அன்யோன்யம் பெருகும்.

இன்று பணவரவு உற்சாகத்தைத் தரும். அதிக பணவரவால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக உள்ளது. ஆரோக்கியமான மன நிலையால் உங்கள் உடல் நிலை நன்கு பராமரிக்கப்படும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். முன்னேற்றமும் திருப்தியும் நிறைந்த நாளாக அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

இன்று பணியிடத்தில் அமைதி நிலவும். உற்சாகத்துடனும் உடனுக்குடனும் வேலை செய்வீர்கள். அதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் வெளியிடங்களுக்குச் செல்வீர்கள்.

இன்று பணவரவு காணப்படும். பணவரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் சந்தோஷமான மனநிலை உங்களுக்கு ஆரோக்கியத்தை பெற்றுத் தரும். இன்று உங்கள் உடல் நிலையில் எந்தக் குறைபாடும் இருக்காது




இன்று யதார்த்தமாக செயல்பட வேண்டிய நாள். பெரிய எதிர்பார்ப்புகளுடன் செயலாற்றாதீர்கள். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இன்று அதிக பணிச்சுமை காரணமாக பணியை திறம்பட செய்வதில் சில தடைகள் இருக்கும்.

கணவன் மனைவி இடையே உணர்ச்சி வசப்படாமல் செயலாற்ற வேண்டும். அதன் மூலம் நல்லுறவையும் மகிழ்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கூடுதலாக செலவு செய்ய நேரிடலாம். எனவே இன்று செலவுகளை சமாளிப்பதில் சிறிது கஷ்டம் இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இல்லலை. மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் கவலைகளால் பாதிக்கப்படும் நாள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் உணர்ச்சி வசப்படாமல் இருந்து அமைதி பெறலாம்.

சவால்களை எதிர்கொள்ளும் நாள். இன்று ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கும். நன்கு பணியாற்ற அட்டவணை அமைத்து பணியாற்றுங்கள்.

உங்கள் துணையாரிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதை தவிர்ப்பதன் மூலம நல்லுறவை வளர்க்கலாம்.

இன்று வீட்டுத் தேவைகளுக்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவைகள் அதிகரிக்கும். அதனால் செலவும் அதிகரிக்கும்.

தாயாரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரிடும் அதனால் கூடுதல் செலவுகள் நேரலாம்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றியடையும் நாள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் மனது நிறைந்திருக்கும் நாள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணிவான மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையாரை சந்தோஷப்படுத்துவீர்கள். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் பெருகும்.

பணவரவு திருப்திகரமாக அமையும். உங்கள் கடின உழைப்புக்கான போனஸ் அல்லது ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று உங்கள் மனதில் நம்பிக்கை நிறைந்திருக்கும். இன்றைய நாளில் நீங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். இன்று மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதாக நடக்கும்.

மேற்கொண்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை எளிதாகச் செய்ய இயலும்.

உங்கள் துணையுடன் சந்தோஷமான தருணங்களை பகிரந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு விஷேத்தைப் பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கும்.

இன்றைய நாள் ஆரோக்கியமான நாளாக உங்களுக்கு அமையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.08.2025




இன்று சில அசௌகரியங்கள் ஏற்படலாம். பொறுமையும் நேர்மறை எண்ணங்களும் இருந்தால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். திறமையாகச் செயல்பட அட்டவணையிட்டு திட்டமிடல் அவசியம்.

குடும்ப விஷயங்கள் காரணமாக கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படும். எனினும் உங்கள் சரியான அனுகுமுறை மூலம் அதை தடுக்கலாம்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். உங்கள் தேவைகளை சந்திக்க சிறு கடன்களை வாங்க நேரிடலாம்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியான மன நிலை இருக்கும். உங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவீர்கள் முக்கியமான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை கிட்டும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக்களை பெறுவதற்கான நல்ல வாய்ப்பு இன்று அமைந்துள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நல்ல புரிந்துணர்வின் மூலம் நல்லுறவை வலுப்படுத்தலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் நன்கு பணம் சம்பாதிக்க இன்றைய நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள்.

இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். மனதை சிந்தனையின்றி ஓய்வாக வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று யதார்த்தமாக இருக்க வேண்டிய நாள். உங்கள் காரியங்களை மேற்கொள்வதில் சில தடைகள் நேரலாம்.

அனுசரித்து போவதன் மூலம் திறம்பட பணியாற்ற முடியும். நன்கு திட்டமிட்டு செயல்பட்டால் உங்கள் திறமை அதிகரிக்கும்.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். அது நல்லுறவை பாதிக்கும்

நிதிநிலைமை கவலை தரும் வகையில் இருக்கும். தேவையற்ற செலவுகள் குடும்பத்தில் ஏற்படும்.

உங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு மிதமான பலன்களையே தரும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். இன்று நண்பர்கள் கூட உங்கள் விரோதிகளாக மாற வாய்ப்புண்டு.

இன்று கடமைகள் அதிகமாக காணப்படும். ஓய்வின்றி உழைக்க நேரலாம்.சிறந்த முறையில் பணியாற்ற நல்ல உத்தியைக் கையாளுங்கள்.

உங்கள் பாதுகாப்பு நிலைமை பற்றி உங்கள் துணையாருடன் விவாதிக்காதீர்கள். அதனால் உறவு பாதிக்கப்படும். மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம்.

இன்று பண வரவும் செலவும் கலந்து காணப்படுகின்றது. பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் கால் வலியால் பாதிக்கப்படலாம்.

# திருக்கோவிலில் இல்மனைட் அகழ அனுமதி வழங்கப்படவேமாட்டாது!

## பிரதேச சபைத் தவிசாளர் சசிகுமார் திட்டவட்டம்



தவிசாளராக நான் இருக்கும் வரை திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்குள் இல்மனைட் அகழ்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அதற்கான அனுமதியும் வழங்கப்படாது என திருக்கோவில் பிரதேச சபை தவிசளார் எஸ். சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்குள் இல்மனைட் அகழ்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதோடு இல்மனைட் அகழ்வதற்கான பாதைப் பயன்பாடும் தடை செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபையின் இரண்டாவது சபைக் கூட்ட தீர்மானத்தின்படி இந்தத்தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தை மையமாக வைத்து இல்மனைட் அகழ்வு செய்வதற்கான முன்முனைப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்தப் பிரதேச மக்கள் இதற்கு நீண்ட காலமாக எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றனர். இயற்கையின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் இவ்வாறான சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. – என்றார்.